TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110296

1. District : நீலகிரி மாவட்டம் — PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் — Year: 2021 ஆண்டு — FIR No.: 02/AC/2021 மு.த.அ. எண் — Date: 18.02.2021 நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION — Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED — Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: IN 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 12.02.2021 — Date to : நாள் வரை 18.00 Hrs அளவில்
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 15.02.2021 — Time to : நேரம் வரை 17.00 Hrs அளவில்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.02.2021 — Time நேரம் : 18.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.02.2021 — Time நேரம் : 06.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 50km தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — ஆரம்ப சுகாதார நிலையம் தூதம்பட்டு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திருமதி A. கிரிமாத் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — மணிகண்டன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — — (d) Nationality : நாட்டினம் — இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் — — (g) Address : முகவரி — 5/252, மைசன்பள் தெரு, சிந்தாமணிபட்டி (Po) கடவூர் (Tk) கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. பழனியம்மாள் நர்ஸ் ஆரம்ப சுகாதார நிலையம் தூதம்பட்டு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக
கு.எண் 02/AC/2021 U/S 7(a) PREVENTION OF
CORRUPTION ACT 1988 AS AMENDED IN 2018
தொடர்பு தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து
இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஆ. கோமதி 18.02.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 18/2/21

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.02.2021 அ

Name: பெயர் C. …………
Rank: நிலை ………………….No. எண் ………
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு
கரூர்.மாவட்டம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No 2/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் C.லதா ஆகிய நான் 17.02.2021 ம் தேதி 18.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது திருமதி.A.இளமதி, க/பெ.மணிகண்டன், 5/252, ரைஸ்மில் தெரு, சிந்தாமணிபட்டி (PO) கடவூர் (TK), கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் A.இளமதி, க/பெ.மணிகண்டன், 5/252, ரைஸ்மில் தெரு, சிந்தாமணிபட்டி (PO), கடவூர் (TK), கரூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வலர் அவர்களுக்கு, லஞ்ச ஒழிப்பு துறை, கரூர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கடந்த 2.12.2020 தேதி சிந்தாமணிபட்டியைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவரின் மகன் மணிகண்டனுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. எனது கணவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். நான் தற்போது இரண்டு மாதம் கர்ப்பமாக உள்ளேன். நான் கர்ப்பமான விபரத்தை எனது ஊரில் உள்ள அங்கன்வாடியில் பணிபுரியும் ஊழியர் திருமதி.பானுமதி அவர்களிடம் தெரிவித்து பதிவு செய்து கொள்ளும்படி கூறினேன். அதன் பின்பு தரகம்பட்டி நர்ஸ் திருமதி.பழனியம்மாள் சிந்தாமணிபட்டி பகுதியைச் சேர்ந்த கர்ப்பமாக உள்ள அனைத்து பெண்களையும் 10.02.2021 ம் தேதி அங்கன்வாடியில் வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள சொல்லி உள்ளார். அந்த தகவல் கிடைத்தன் பேரில் நான் 10.02.2021 ம் தேதி காலை அங்கன்வாடிக்கு சென்றேன். அப்போது காலை சுமார் 11 மணிக்கு நர்ஸ் திருமதி.பழனியம்மாள் எனக்கு தடுப்பூசி போட்டார். மேலும் என்னை மைலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று பதிவு செய்யச் சொன்னார். நான் அடுத்த நாள் 11.02.2021 ஆம் தேதி அரசு மருத்துவ மனைக்கு சென்று நான் கர்ப்பமாக இருப்பதை நர்ஸ் மூலம் பதிவு செய்தேன். அப்போது மருத்துவமனையில் என்னை பரிசோதனை செய்த நர்ஸ் என்னுடைய கர்ப்பம் சம்மந்தமான ஒரு நோட்டில் பதிவு செய்து, நான் வசிக்கும் தரகம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பத்தினை பதிவு செய்து தாய் மற்றும் சேய் பாதுகாப்பு அட்டை பெற்று கொள்ளுமாறும், அரசால் வழங்கப்படும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் பயன்பெறுமாறும் கூறினார். அதனால் தரகம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் சென்று நர்ஸ் திருமதி.பழனியம்மாள் அவர்களை மீண்டும் 12.02.2021 ம் தேதி சாய்காலம் சுமார் 6 மணிக்கு பார்த்து என்னுடைய ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம், மைலம்பட்டி அரசு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட இரத்த பரிசோதனை விபரங்கள் ஆகியவற்றின் நகல்களை கொடுத்தேன். அப்போது அவரிடம் அரசால் வழங்கப்படும் மகப்பேறு கால உதவி

திட்டத்தில் பயன் பெறுவதற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்து தாய் மற்றும் சேய் பாதுகாப்பு அட்டை வழங்குமாறு கேட்டேன். அப்போது அவர் என்னுடைய விபரங்களை கம்ப்யூட்டரில் போட்டு தாய் மற்றும் சேய் பாதுகாப்பு அட்டை வழங்குவதாகவும், அதற்கு ரூ.2000/- செலவாகும் என்று கூறினார். நான் நர்ஸ் திருமதி.பழனியம்மாளிடம் ரூ.2000/- அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்னை விபரம் புரியாத ஆளாக இருக்கிறாய், இந்த பணம் ரூ.2000/- உன்னுடைய விபரங்களை கம்ப்யூட்டரில் போட்டு தாய் மற்றும் சேய் பாதுகாப்பு அட்டை உனக்கு வழங்குவதற்கு எனக்கு தரவேண்டியது என்று கூறினார். நான் அவரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, பணத்தை ஏற்பாடு செய்வதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். மறுபடியும் நான் 15.02.2021-ம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவரை நேரில் சந்தித்து ஒரு வாரமாக எனது கணவர் வேலைக்கு செல்லாததால் என்னால் ரூ.2000/- பணம் புரட்ட முடியவில்லை, தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் பணத்தை எல்லாம் குறைக்க முடியாது, உன்னைய மாதிரி கர்ப்பமாக இருக்கிறவங்க எல்லாரும் சத்தமில்லாமல் பணம் கொடுக்கிறாங்க உனக்கு மட்டும் கொடுக்க முடியலயா என்றும், பணம் கொடுத்தால்தான் தாய் மற்றும் சேய் பாதுகாப்பு அட்டை கொடுப்பேன் என்றும் கூறினார். மேலும் அவர் கேட்ட பணத்தை தயார் செய்துவிட்டு இந்த வாரத்தில் நேராகவோ அல்லது போன் செய்து கேட்டுவிட்டோ வந்து கொடு என்று கூறினார். எனக்கு நர்ஸ் திருமதி.பழனியம்மாள் என்பவருக்கு லஞ்சம் கொடுத்து தாய் மற்றும் சேய் பாதுகாப்பு அட்டை பெற விருப்பம் இல்லை. எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXXXXXXX (A.இளமதி) 17/2/2021.

Sir, Received the complaint on 17.02.2021 at 18.00 hrs,. A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 06.00 hrs on 18.02.2021. Sd/- (xxxxxxxx) 18.02.2021 C.Latha, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tmt.A.Elamathi, W/o.Manikandan, 5/252, Rice Mill Street, Sinthamanipatti (PO), Kadavur (TK), Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

18/2/2021

(C.Latha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.